05.04.2023 அ.வ. எண். 301/2018 வா.சா.1 உஷாநந்தினி

குறுக்கு விசாரணை

எனக்கு 1993 ஆம் ஆண்டு திருமணம் ஆனது. என் கணவருடன் பிறந்தவர்கள் 3 பேர். அவர்கள் பெயர் கோபால், திருவேங்கடம், உத்திராணி. என் திருமணத்தின் போது என்னுடைய கணவா் இராணுவத்தில் சிப்பாயாக வேலைபார்த்து வந்தார். என் திருமணத்தின்போது கோபால், திருவேங்கடத்திற்கு திருமணம் நடைபெறவில்லை, உத்திராணிக்கு திருமணம் ஆகியிருந்தது. என் திருமணத்தின் போது என் மாமனார், மாமியாா் இருந்தார்கள். திருமணத்திற்கு பிறகு நாங்களா் கூட்டுக்குடும்பமாக தான் இருந்தோம். 1999 ஆம் ஆண்டு என் கணவா் இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்றார். காஞ்சிபுரத்தில் பி.எஸ்.என்.எல் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். காஞ்சிபுரத்தில் வாடகை வீட்டில் வசித்து வந்தோம். காஞ்சிபுரத்தில் எனக்கு சொந்தவீடு உள்ளது. 2008 ஆம் ஆண்டு கட்டினோம். காஞ்சிபுரத்தில் என் கணவர் குடும்பத்திற்கு சொந்த வீடு உள்ள விவரம் எனக்கு தெரியும். என் கணவரின் அத்தைகள் பிரச்சனை செய்ததால் குடும்ப வீட்டை விற்பனை செய்துவிட்டார்கள். என் கணவரின் அத்தைகள் பிரச்சனை செய்ததால் குடும்ப வீட்டை விற்பனை செய்யவில்லை என்றும், என் கணவர் இராணுவத்தில் சேர்வதற்காக வீட்டை விற்பனை செய்து சேர்ந்தார் என்றால் சரியல்ல. காஞ்சிபுரத்தில் இருந்த வீடு இல்லாமல் தாவா சொத்து கிராமத்தில் இருந்த பூர்வீக சொத்தை ரூ.2,00,000/- ற்கு விற்பனை செய்து அதில் ரூ.1,00,000/- கொண்டு காஞ்சிபுரத்தில் உள்ள என் வீட்டை என் கணவர் கட்டினார் என்று சொன்னால் தவறு. பாக்கி ரூ.1,00,000/- தாவா சொத்தை வாங்க என் கணவர் பயன்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து கிராமத்தில் ஏற்கனவே இருந்த பூர்வீக சொத்தான ஏக்கர் 4.40 நிலத்தில் ஏக்கர் 2 விற்பனை செய்து குடும்ப கடன், நாங்கள் வாங்கியிருந்த கடன் அடைக்கப்பட்டது என்று சொன்னால் 40 செண்டை 2009 ஆம் ஆண்டு விற்பனை செய்து கடனை அடைத்துவிட்டார். பாக்கி ஏக்கர் 2.40 நிலத்தை விற்பனை செய்து அந்த பணத்தை நான், பிரதிவாதிகள், என் கணவரின் தங்கை, என் மாமியார்

சமமாக பிரித்துக்கொண்டோம் என்றால் பங்கு கொடுத்தார்கள் வாங்கிகொண்டேன். என் மாமியார் அவருடைய பங்கு தொகையை கொண்டு தாவா சொத்தில் உள்ள பம்ப் செண்டை சீர்செய்யவும், என்னுடைய மகளுக்கு சீர்செய்யவும் பயன்படுத்தினார் என்றால் சரியல்ல. என் கணவர் போகசீட்டு கட்டிவந்தார். அந்த சீட்டுதொகை எவ்வளவு என்று தெரியாது, எத்தனை சீட்டு செலுத்தியிருந்தார் என்றும் தெரியாது. அந்த பணத்தை என்னிடம் வந்து வாங்கிசெல்வார்கள். என் கணவர் உயிருடன் இருந்தபோது சீட்டு எடுத்துவிட்டார். சீட்டு எடுத்த விவரம் எனக்கு தெரியாது. வீடுகட்டுவதற்காக பூர்வீக வீட்டை விற்பனை செய்து அதில் ரூ.1,00,000/- மும், சீட்டு ரூ.1,00,000/- , ரூ.2,00,000/- என சீட்டுக்கள் எடுத்துக்கொண்டார் என்று சொன்னால் அதை என்னிடம் என் கணவர் சொல்லவில்லை. சீட்டு பணத்தை நானும், பிரதிவாதிகளும் மூன்றாக பிரித்து தொகையை செலுத்தினோம் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாவா சொத்தில் எந்த வருடம் வீடுகட்டினார்கள் என்றால் நான் கட்டவேண்டாம் என்று சொன்னேன் அவர்கள் கட்டிவிட்டார்கள். பிரதிவாதிகள் வீடு புதுமனை புகுவிழாவிற்கு சென்றேன் என்றால் என்னுடைய மகள் திருமண அழைப்பிதழ் கொடுக்க சென்றேன் தள்ளிவிட்டார்கள். என் மகள் திருமண அழைப்பிதழில் என் கணவரின் சகோதரர்கள் பெயரை போடவில்லை என்றும், அதனால் தான் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்றும், நான் சொல்வதுபோல் வீடுகட்டுவதில் எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை என்று சொன்னால் கோபால் பெயரை போட்டிருந்தேன், திருவேங்கடம் பெயரை போடவில்லை. கோபாலை கேட்டு தான் பத்திரிக்கை அச்சடித்தேன். வீடுசம்மந்தமாக எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை என்றும், திருமண அழைப்பிதழில் பெயர் போடுவது சம்மந்தமாக தான் பிரச்சனை ஏற்பட்டது என்றும், என்னுடைய சம்மதத்தின் பெயரிலேயே பிரதிவாதிகள் வீடுகட்டினார்கள் என்று சொன்னால் சரியல்ல. என் கணவரின் சகோதரி உத்திராணி மகனை என்னுடைய மூத்த மகளுக்கு திருமணம் செய்துவைக்க விருப்பப்பட்டேன் என்றும், கோபால் மகளை அவருக்கு திருமணம் செய்ய முடிவுசெய்ததால் அந்த

கோபத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றும், அதுவரை எங்களுக்குள் எவ்வித பூசலும் இல்லாமல் இருந்துவந்தோம் என்றால் சரியல்ல. கோபால் மகளுக்கு திருமணம் ஆவதற்கு முன்பாகவே என் மகளுக்கு திருமணம் ஆகிவிட்டது, என் மகளுக்கு குழந்தையும் இருக்கிறது. வழக்கு நிலுவையில் இருந்தபோது வழக்கு சொத்தை விற்பனை செய்து என்னுடைய இளையமகளுக்கு திருமணம் செய்தேன். சொத்தை விற்பனை செய்ய நீதிமன்றத்தில் அனுமதி வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். நீதிமன்ற உத்தரவை வாங்கிகொடுத்ததாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை யார் அனுபவிக்கிறார்கள் என்றால் அளக்க சென்றாலே வெட்டிவிடுவதாக சொல்கிறார்கள். இது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததற்கு காவல்துறையினர் அழைத்து விசாரித்தார்கள். விசாரணையில் பிரதிவாதிகள் விற்ககூடாது என சொன்னார்கள். நான் அளக்க விடவும் சொன்னேன் அளக்கவிடவில்லை, காவல்துறையினர் சொல்லியும் விடவில்லை. வா.சா.ஆ.3ல் என்னுடைய மாமியார் பெயரும் உள்ளது. என் மாமியார் இறந்து சமார் 5 வருடங்கள் இருக்கும். என் மாமியார் வாரிசுகளை சேர்க்கவில்லை, தன்னிச்சையாக நான் விற்பனை செய்தேன். பட்டா எண். 472 சொத்தை என் மாமனார் 23.03.1994 ஆம் தேதி பாலசுந்தரம் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றும், 30.06.1998 மற்றும் 09.06.1995 தேதிகளில் பாலசுந்தரம் என்பவரிடமிருந்து அடமானம் பெற்ற சொத்தை என் கணவர் அவருடைய சகோதரர்களுக்கு தெரியாமலும், அவர்களுக்கு படிப்பறிவு இல்லை என்பதை வைத்தும், என் கணவர் மீதிருந்த நம்பிக்கையை ஏமாற்றும் விதமாக என் கணவர் மோசடியாக அவர் பெயரில் மாற்றிக்கொண்டார் என்றால் சரியல்ல, மாமனார் வாங்கியது உண்மை தான். என் கணவர் சிப்பாயக தான் இராணுவத்தில் பணிபுரிந்தார் என்றும் பெரிய அளவில் ஓய்வூதியம் மற்றும், பணப்பலன் வந்திருக்காது என்றும், காஞ்சிபுரத்தில் வீடு கட்டியிருக்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் வீடு கட்ட ஆரம்பித்து செண்டரிங் பணி

நடந்துகொண்டிருந்தபோதே விபத்தில் இறந்துவிட்டார். அதில் வந்த பணத்தை கொண்டு தான் வீடு கட்டினேன். பிரதிவாதிகள் வீடுகட்டியுள்ள இடத்தில் தலா 50 செண்ட் கொடுப்பதாகவும், தண்ணீர் பாசன உரிமை கொடுப்பதாகவும் பஞ்சாயத்தார் முன்னிலையில் சொன்னேன் என்றும், பின்னிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. பிரதிவாதிகள் பயிர் செய்யும் நிலத்தில் வரும் விளைச்சலை எனக்கு கொடுத்துவருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் விபத்தில் இறந்தபிறகு வந்த இழப்பீட்டு தொகையை கொண்டு வீடுகட்டவில்லை என்றும், தாவா சொத்தை கிரையம் வாங்கவில்லை என்றும், பூர்வீக சொத்தை விற்பனை செய்து வந்த தொகையை கொண்டு வீடுகட்டினேன் என்றும், சொத்தை கிரையம் வாங்கினேன் என்றும் சொன்னால் தவறு. தாவா சொத்து பூர்வீக சொத்தின் மூலம் வாங்கப்பட்ட சொத்து என்றும், அதில் என் கணவருக்கு மட்டுமே உரிமையில்லை என்றும், என் மாமனாரின் வாரிசுகள் அனைவருக்கும் உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருந்தபோது எந்த மாற்றமும் செய்யக்கூடாது என்றும், அவ்வாறு நான் செய்தது சட்டப்படி தவறு என்று சொன்னால் என் மகள் திருமணத்திற்காக விற்பனை செய்தேன். அதனால் நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.